## மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிமுகப்படுத்திய

# ஷேர் ஆட்டோ, டாக்சிகளில் 5 லட்சம் பேர் பயணம்

சென்னை, நவ.14–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் 7 மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. தூரத்திற்கு ரூ.5 கட்டணத்தில் ஷேர் ஆட்டோ சேவையும், ரூ.10 கட்டணத்தில் டாக்சி சேவையும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் மட்டும் 53 ஆயிரத்து 586 பேர் இந்த சேவையை பயன்படுத்தியுள்ளனர். கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தற்போது வரை 5 லட்சத்து 88 ஆயிரத்து 455 பயணிகள் ஷேர் ஆட்டோ மற்றும் டாக்சிகளில் பயணம் செய்துள்ளனர்.

இதேபோல் 16 மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து ரூ.10 கட்டணத்தில் தொடங்கப்பட்ட மெட்ரோ வேன் இணைப்பு சேவையை இதுவரை 15 ஆயிரம் பேர் பயன்படுத்தியுள்ளனர். மேலும், 32 மெட்ரோ ரெயில் நிலையங்களில் மெட்ரோ வேன் இணைப்பு சேவை விரைவில் தொடங்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.